அசல் வழக்கு எண்.50/2021 வா.சா.1 பாஸ்கரன் த/பெ பெருமாள்

**30.08.2024 குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

12. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்து சம்மந்தமாக 28.06.2010 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை வழக்கறிஞர் திரு.சிவக்குமார் மூலமாக சந்திரன் மற்றும் மோகன் ஆகியோருக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு சந்திரன் மற்றும் மோகன் பதில் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை. 28.06.2010 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு குறித்து இந்த வழக்கு தாவாவிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

13. 28.06.2010 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் அம்மாகண்ணம்மாள் 30 சென்ட் நிலத்தை கிரயம் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றும் அந்த கிரயத்திற்கான சர்வே நெம்பர் மற்றும் கிரய தேதி எதுவும் குறிப்பிடாமல் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 28.06.2010 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்புக்கு மோகன் எந்த பதிலும் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய மோகன் தற்போது என்னோடு சேர்ந்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பில் அம்மாகண்ணம்மாள் ராஜேஸ்வரி அம்மாளுக்கு 25 சென்ட் கிரயம் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு இருக்க 28.06.2010 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லி உள்ளவாறு 30 சென்ட் கிரயம் கொடுத்தது உண்மையா,அல்லது வா.சா.ஆ.,9 வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லி உள்ளவாறு 25 சென்ட் கிரயம் கொடுத்தது உண்மையா என்றால் 25 சென்ட் கிரயம் கொடுத்தது தான் உண்மை. 28.06.2010 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை நான் கொடுத்த தகவலின் பேரில் தான் என் வழக்கறிஞர் அனுப்பினார் என்றால் சரிதான்.

15 தாவாச் சொத்துக்கள் 1 முதல் 4 அயிட்டம் பெருமாள், அம்மாகண்ணம்மாள் மற்றும் பெரியதாயி அம்மாள் ஆகியோர் சேர்ந்து கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை மேற்சொன்ன பெருமாள், அம்மாகண்ணம்மாள் மற்றும் பெரியதாயி அம்மாள் ஆகியோர் பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

16. பெருமாள் அம்மாகண்ணம்மாள் மற்றும் பெரிய தாயி அம்மாள் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை என்பதால் அம்மாகண்ணம்மாளுக்கு தனியாக பாகம் ஒதுக்கப்பட்ட சொத்து என்று எதுவும் இல்லை என்று சொன்னால் பாகம் ஒதுக்கப்பட்ட சொத்து அல்ல. அம்மாகண்ணம்மாள் தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கிய சொத்துக்களை தான் ராஜேஸ்வரி அம்மாளுக்கு கிரயம் கொடுத்தார். அவ்வாறு நான் சொல்வது போல் அம்மாகண்ணம்மாள் தன் பெயரில் தனியாக கிரயம் வாங்கினார் என்பதை காட்டுவதற்கு அவரது பெயரில் உள்ள கிரய பத்திரம் தாவாவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

17. வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தில் அம்மாகண்ணம்மாள் தாம் தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கிய சொத்து என்றும் எந்த தேதியில் யாரிடமிருந்து எந்த ஆவணம் மூலம் கிரயம் பெற்றார் என்றும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எந்த விவரமும் வா.சா.ஆ.3ல் சொல்லப்படவில்லை.

18. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் தாவாவில் சொல்லப்பட்டுள்ள 1 முதல் 4 அயிட்ட சொத்தின் சர்வே நெம்பர் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லைஆனால் அந்த சர்வே நெம்பர்கள் பின்னர் மாறி உள்ளது. அவ்வாறு நான் சொல்வது போல் வா.சா.ஆ.1 கிரய

பத்திரத்தில் உள்ள சர்வே நெம்பர்களுக்கான சொத்துக்கள் தான் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களின் சர்வே நெம்பர் என்று காட்டுவதற்கு சர்வே நெம்பர் ஒப்பீடு ஆவணம் எதுவும் வருவாய் துறையில் பெற்றுதாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

19. தாவா 4ம்அயிட்ட சொத்திற்கு ராஜேஸ்வரி அம்மாள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் இன்றைய தேதி வரையில் பட்டா பெருமாள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அதனால் தாவா 4ம் அயிட்ட சொத்திற்கு ராஜேஸ்வரி அம்மாள் பெயரில் பட்டா உள்ளதாக தாவாவில் சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல.

20. தாவா 5,6 அயிட்ட சொத்துக்கள் வா.சா.ஆ.2 கிரய பத்திர முன்னிலைக்கு பெருமாள் கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரய பத்திர முன்னிலைக்கு கிரயம் வாங்கும்போது நான் பாஸ்கரன், பார்த்தசாரதி மற்றும் மோகன் ஆகியோர் படித்துக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் 1ம் பிரதிவாதி சந்திரன் மட்டும்தான் ராணுவத்தில் பணி புரிந்து வந்தார் என்றால் சரிதான். அதனால் 1ம் பிரதிவாதி தான் ராணுவத்தில் சம்பாதித்த வருமானத்தை கொண்டு வழக்கு சொத்து அயிட்டம் 5 மற்றும் 6 ஆகியவற்றை தன் தந்தைபெயரில் கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல.

21. வா.சா.ஆ.2 கிரய பத்திரம் பதிவு செய்யப்பட்ட கால கட்டத்தில் என் தந்தை என்ன வருமானம் ஈட்டினார் என்றும், என்னென்ன செலவுகள் செய்தார்என்றும், எவ்வளவு தொகை சேமிப்பாக சேர்த்து வைத்திருந்தார் என்றும் தாவாவில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை.

22. பெருமாள் தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களை 2ம் பிரதிவாதி விஜயா பெயரில் அடமானம் போட்டுக்கொடுத்தார் என்றால் சரிதான். அதேபோல் ராஜேஸ்வரி அம்மாளும் 2ம் பிரதிவாதி பெயரில் ஒரு அடமானம் போட்டுக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த அடமானங்கள் இன்றைய தேதி வரையில் சார் பதிவாளர் அலுவலகத்தில் ரத்து செய்யப்படாமல் தான் உள்ளது என்றால் சரிதான். அதற்குகாரணம் நாங்கள் அடமானத்தொகையை கொடுத்துவிட்டு அசல் ஆவணங்களை திரும்ப பெற்று கொண்டோம். ஆனால் நிலத்தினை சமண்படுத்திய செலவான ரூ.1,00,000/- கொடுத்தால் தான் அடமானத்தை ரத்துசெய்து தருவதாக 2ம் பிரதிவாதி சொன்னார். அந்த காரணத்தினால் அடமானத்தை இன்றைய தேதி வரை ரத்து செய்யவில்லை. நான் திரும்ப பெற்று கொண்டதாக சொல்லும் அசல் ஆவணத்தை இந்த தாவாவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அடமான பத்திரத்தில் பணத்தை பெற்று கொண்டு பைசல் செய்யப்பட்டதாக குறிப்பு எதுவும் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

23. 1ம் பிரதிவாதியின் மகனிடம் அசல் பத்திரத்தை வாங்கி சென்றுவிட்டு அடமான பணத்தை திரும்ப கொடுக்காமல் இருந்ததை 2ம் பிரதிவாதி கேட்டதால் தான் பிரச்சினை ஏற்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அசல் அடமான பத்திரத்தை பணம் கொடுத்து வாங்கப்பட்டதா அல்லது பணம் கொடுக்காமல் வாங்கப்பட்டதா என்ற விவரம் ராஜேஸ்வரி அம்மாளுக்குதான் தெரியும் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் அங்கு இல்லை.

24. அவ்வாறு எந்த தேதியில் அடமான பணத்தை கொடுத்து 2ம் பிரதிவாதியிடம் அடமானத்தை பைசல் செய்தோம் என்ற விவரத்தை வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பிலும், தாவாவிலும் மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லிஉள்ளேனா என்றால் இல்லை.

25. என்னையும், மோகன் மற்றும் பார்த்தசாரதியையும் ராணுவத்தில் சேர்த்துவிட்டது 1ம் பிரதிவாதிதான் என்றால் மோகனை மட்டும் சேர்த்துவிட்டார். ஆனால் என்னையும் பார்த்தசாரதி யையும் சேர்த்துவிடவில்லை. தாவாச் சொத்தில் யார் பயிர் வைத்தது, எவ்வளவு வருமானம் வந்தது, என்ன பயிர் வைக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கு அடங்கல் எதுவும் பெற்று தாவாவில் செய்துள்ளேனா என்றால் இல்லை.

26. தாவா 1 முதல் 6 அயிட்ட சொத்துக்கள் நஞ்சை நிலமா அல்லது புஞ்சை நிலமா என்றால் புஞ்சை நிலமாகும். அந்த நிலங்கள் கிணறுடன் பயிர் வைக்கக்கூடிய நிலங்கள்தான். தாவாச் சொத்தில் நான் சொல்வதுபோல் கிணறு இருப்பதாக வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பிலும் தாவாவிலும் சொல்லிஉள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆனால் கிரயப் பத்திரத்திலும் அடமான பத்திரத்திலும் கிணறு பற்றி சொல்லப்பட்டுள்ளது. தாவா 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களில் 1ம் பிரதிவாதி தான் பயிர் வைத்துவருகிறார் என்பதை காட்டுவதற்கு அதற்கான அடங்கல் என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் நான் அந்த நிலத்து பக்கம் சென்றதில்லை. அந்த ஊரிலும் இல்லை. வெளியூரில் வேலை செய்வதால் என்னால் அடங்கல் வாங்கி தாக்கல் செய்ய இயலாது.

27. தாவா 1 முதல் 6 அயிட்ட சொத்துக்கள் இன்றையதேதி வை ரயில் பயிர் வைக்கப்படாமல் கரம்பாக தான் உள்ளது என்றால் அதை நான் தாவா சொத்துக்களுக்கு போய் பார்த்து தான் சொல்ல முடியும். தாவாச் சொத்துக்கள் பொது சொத்துக்கள் என்ற காரணத்தினால் அந்த சொத்துக்களை சமண்படுத்துவதற்கு எங்களிடம் பணம் கேட்டாரா என்றால் அவ்வாறு பணம் எதுவும் கேட்கவில்லை. ஆனால்அடமானபத்திரத்தை கேட்டபோது மட்டும் சமண் படுத்தியதற்கு பணம் கேட்டார்.

28. 02.01.2018 தேதியில் 1ம் பிரதிவாதி பிரதிவாதிகளான எங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்று அனுப்பினார் என்றால் சரிதான். 02.01.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 அறிவிப்புக்கு நாங்கள் அனுப்பிய பதில்அறிவிப்பு தான் என்னிடம் காட்டப்படும் 05.01.2018 தேதியிட்ட பதில் அறிவிப்பு என்றால் சரிதான் 05.01.2018 தேதியிட்ட பதில் அறிவிப்பு **பி.வா.சா.ஆ.2** ஆகும்.

29. பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர்அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சர்வே நெம்பர் 292/2பி-ல் 10 சென்ட் சொத்திற்கான அசல் கிரய பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம்தான் உள்ளது. அந்த சொத்து நான் தனிப்பட்ட முறையில் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் கிரயம் பெற்ற சொத்தாகும். அந்த சொத்து என் தனிப்பட்ட சொத்து அல்ல என்றும் அதுவும் பொதுசொத்துதான் என்று குறிப்பிட்டுதான் பி.வா.சாஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும் ஆனால் அந்த சொத்தினை சேர்க்காமல் இந்த வழக்கினை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சொத்து என் தனிப்பட்ட சொத்து என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

30. நான் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்ட பிறகு பிரதிவாதிகள் பதில் கொடுக்கவில்லை என்று சொல்லி உளளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் பதில் வரவில்லை. இந்த வழக்கு 04.02.2021ல் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 20.01.2021 தேதியிட்ட பதில் அறிவிப்பை என் வழக்கறிஞருக்கு அனுப்பினார் என்றும் அந்த அறிவிப்பை என் வழக்கறிஞர் 29.01.2021 அன்று அஞ்சலக ஒப்புகை அட்டை மூலமாக பெற்று கொண்டார் என்றால் சரிதான். 20.01.2021 தேதியிட்ட பதில் அறிவிப்பு மற்றும் அதில்

ஒட்டப்பட்ட 23.01.2021 தேதியிட்ட அஞ்சலக ரசீது **பி.வா.சா.ஆ.3,** 29.01.2021 தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை **பி.வா.சா.ஆ.4** ஆகும்.

31. 28.06.2010 தேதியிட்ட வழக்கறிஞர் திரு.சிவக்குமார் அவர்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவப்புக்கான பதில் அறிவிப்பிலும், வா.சா.ஆ.9 வழக்கறிஞர்அறிவிப்பிற்கான பதில் அறிவிப்பான பி.வா.சா.ஆ.3லும் நிலத்தை சமண்செய்ததற்கான செலவு தொகை ரூ.1,50,000/- கொடுத்து பாகம் பிரித்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் எதற்காக ரூ.1,50,000/- கொடுக்க வேண்டும். நிலத்தை அடமானம் போட்டு அதில் வருமானத்திற்காக அவர் நிலத்தை சமண் செய்த தொகையை நான் எதற்காக கொடுக்க வேண்டும்.

32. என் அப்பா 1994ல் இற்ந்தார் என்றால் சரிதான் என் அப்பா இறந்தபிறகும் 28.06.2010 தேதியிட்ட வழக்கறிஞர்அறிவிப்பு அனுப்பிய பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 2021 ஆண்டுக்கு முன்னதாக வரை வழக்கு சொத்து சம்மந்தமாக நடவடிக்கை என்ன எடுத்தேன் என்றால் எதுவும் இல்லை. முதலில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்படாத விவரங்களை தாவாவில் குறிப்பிட்டுள்ள வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லி அதன் அடிப்படையில் தவறான வழக்கினை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் சரியான வழக்குமூலம் இல்லை என்றும் சரியான நீதிமன்றக்கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதாலும் உண்மையை மறைத்து தாக்கல் செய்யப்பட்ட தாவா என்பதாலும் இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.